**ஆகஸ்ட் – 11**

# TNPSC துளிகள்

- உத்திசார் படைகள் கட்டளையின் (SFC) கீழ் ஒடிசாவின் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை வரம்பில் (ITR) இருந்து அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் திறன் கொண்ட அக்னி-4 நடுத்தர தூர உந்துவிசை எறிகணையை (Agni-4 MRBM) இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்தது.
    - இரண்டு நிலைகளைக் கொண்ட, திட எரிபொருள் எறிகணையான அக்னி-4 சுமார் 4,000 கி.மீ தூரம் வரை தாக்கக்கூடியது மற்றும் சுமார் 1,000 கிலோ எடையைச் சுமந்து செல்லும் திறன் கொண்டது.
- 2026 ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் பிரிக்ஸ் (BRICS) தலைமையின் கீழ் 13-வது பிரிக்ஸ் கல்வி அமைச்சர்கள் கூட்டம் ஒடிசாவின் புவனேஸ்வரில் நடைபெற்றது.
    - இக்கூட்டமானது ஆரம்பகால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி (ECCE), தொழில் நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET), திறன் மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு, தகுதிகளைப் பரஸ்பரமாக அங்கீகரித்தல் மற்றும் கல்வித் தலைமை ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.
- இமாச்சலப் பிரதேசத்தின் டல்ஹவுசி வனக்கோட்டத்தில் கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்குப் பிறகு அரிய வகையான இமயமலை சீரோ (கேப்ரிகார்னிஸ் தார்) பதிவு செய்யப்பட்டுள்ளது.
    - வாழ்விட சீரழிவு, துண்டாக்கம் மற்றும் வேட்டையாடுதல் காரணமாக இது பன்னாட்டு இயற்கை பாதுகாப்புச் சங்கத்தின் (IUCN) செந்நிறப் பட்டியலில் "அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனமாக" இடம்பெற்றுள்ளது.
- இந்திய தொழில்நுட்பக் கழகம் ஹைதராபாத் மற்றும் கிரிம்சன் எனர்ஜி எக்ஸ்பர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் இணைந்து 'அனுக்ஞான்' (ANUGYAN - அணுசக்தித் தொழில்நுட்ப அறிமுக நிகழ்ச்சி) என்ற மூன்று மாத உறைவிடப் பயிற்சியை அறிமுகப் படுத்தியதுடன் சிவில் அணுசக்தி நிபுணர்களுக்கான இந்தியாவின் முதல் தொழில் துறை-கல்வித்துறை பாடநெறி இதுவாகும்.
- பெங்களூரைச் சேர்ந்த ஆஸ்ட்ரோபேஸ் ஸ்பேஸ் டெக்னாலஜிஸ் (Astrobase Space Technologies) நிறுவனமானது, இந்தியாவின் முதல் தனியார் 800-கிலோநியூட்டன் (kN) முழு-ஓட்ட நிலை எரிப்பு (FFSC) ஏவுகல இயந்திரமான 'எவரெஸ்ட்' (EVEREST) என்பதை அறிமுகப்படுத்தியது.
- மகாராஷ்டிராவின் சோமையா வித்யாவிகார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற FISU (சர்வதேச பல்கலைக்கழக விளையாட்டு கூட்டமைப்பு) உலக பல்கலைக்கழக ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியில் தனிநபர் பிரிவில் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை இந்திய ஸ்குவாஷ் வீரர் சூரஜ் குமார் சந்த் பெற்றார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு - சட்ட ஆணையம்

- மறுசீரமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில சட்ட ஆணையத்தின் தலைவராக மணிப்பூர் உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி டி. கிருஷ்ணகுமாரை தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.
- நீதிபதி ஆர்.எம்.டி. டீக்காராமன், டி.கே. ராமச்சந்திரன் மற்றும் ஏ. அருணகிரி ஆகியோர் முழுநேர உறுப்பினர்களாகவும், பி. மோகன்தாஸ் மற்றும் ஆர். கோவிந்தராஜன்

ஆகியோர் பகுதி நேர உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- தமிழ்நாடு மாநில சட்ட ஆணையம் என்பது தற்போதுள்ள சட்டங்களை ஆராய்ந்து சட்ட அமைப்பை மேம்படுத்துவதற்கான மாற்றங்களை பரிந்துரைக்கும் ஒரு மாநில அளவிலான அமைப்பாகும்.
- தற்போதுள்ள சட்டங்களில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து தகுந்த திருத்தங்கள் அல்லது புதிய சட்ட நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பது இதன் பணிகளில் அடங்கும்.
- தமிழ்நாட்டிற்கான சமூக மற்றும் பொருளாதார சட்ட நடவடிக்கைகளையும் இந்த ஆணையம் பரிந்துரைக்கலாம்.
- முந்தைய மாநில சட்ட ஆணையத்தின் பதவிக்காலமும் 2020 ஆம் ஆண்டு ஜூன் 19 முதல் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டதுடன் இந்த ஆணையம் ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்துடன் செயல்படுவதை காட்டுகிறது.





# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் பாலிசிலிகான் PLI திட்டம்

- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமானது (MNRE) பாலிசிலிகான் உற்பத்திக்காக ஒரு பிரத்யேக உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை (PLI) திட்டத்தை தயாரித்து வருகிறது.
- இந்தியாவில் தற்போது பாலிசிலிகான் உற்பத்தித் திறன் இல்லை என்பதால், இது சீனா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதையே பெரிதும் நம்பியுள்ளது.
- முன்மொழியப்பட்ட இத்திட்டம் 10 ஜிகாவாட் (GW) அளவிற்கும் மேலான உள்நாட்டு பாலிசிலிகான் உற்பத்தித் திறனை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பாலிசிலிகான் என்பது சூரிய மின்கலங்களை (solar cells) தயாரிப்பதற்கான மூலப் பொருளாகும், மேலும் இது குறைகடத்திகள் தொழில்துறைக்கும் முக்கியமானதாகும்.

- இந்த நடவடிக்கை இந்தியாவின் சூரியசக்தி விநியோகச் சங்கிலியை வலுப்படுத்தவும், இறக்குமதி சார்பைக் குறைக்கவும் மற்றும் உள்நாட்டு மதிப்பை அதிகரிக்கவும் நோக்கமாக கொண்டுள்ளது.




## இந்தியா – லெசோதோ உறவுகள் 2026




- சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற கூட்டு இருதரப்பு ஒத்துழைப்பு ஆணையத்தின் போது, இந்தியாவும் லெசோதோவும் இருதரப்பு ஒத்துழைப்பின் முழு அளவையும் ஆய்வு செய்தன.
- தெற்கு-தெற்கு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான தங்களின் பகிரப்பட்ட அர்ப்பணிப்பில் வேரூன்றிய, பல்வேறு துறைகளில் இந்தியாவும் லெசோதோவும் நெருங்கிய நட்புறவையும் ஒத்துழைப்பு உறவுகளையும் கொண்டுள்ளன.
- கூட்டு இருதரப்பு ஒத்துழைப்பு ஆணையத்தின் அடுத்த கூட்டம் 2027-ஆம் ஆண்டில் மசேருவில் (லெசோதோவின் தலைநகரம்) நடைபெறும் என்று இரு நாடுகளும் ஒப்புக் கொண்டன.

- லெசோதோ, தென்னாப்பிரிக்காவால் சூழப்பட்ட ஒரு நிலத்தால் சூழப்பட்ட நாடு ஆகும்.
- இது "வானத்தில் உள்ள ராஜ்ஜியம்" அல்லது "மலை ராஜ்ஜியம்" என்றும் அழைக்கப் படுகிறது.
- முழுவதும் 1400 மீட்டர் உயரத்திற்கு மேல் அமைந்துள்ள உலகின் ஒரே நாடு இதுவாகும்.
- லெசோதோ, தெற்கு ஆப்பிரிக்காவின் மிக உயரமான சிகரத்தைக் கொண்ட மலோட்டி மலைத்தொடரில் அமைந்துள்ளது.
- டிராகன்ஸ்பெர்க் மற்றும் மலோட்டி மலைகள் இதன் முக்கிய மலைத்தொடர்கள் ஆகும்.
- இந்த நாட்டின் 80%-க்கும் அதிகமான பகுதி 1,800 மீட்டருக்கு (5,906 அடி) மேல் அமைந்து உள்ளது.
- லெசோதோ உலகின் தென்கோடியில் அமைந்துள்ள நிலத்தால் சூழப்பட்ட நாடாகும்.
- மற்றொரு நாட்டின் நிலப்பரப்பால் முழுமையாகச் சூழப்பட்ட உலகின் மூன்று சுதந்திர நாடுகளில் இதுவே மிகப்பெரியது; வாடிகன் நகரம் மற்றும் சான் மரினோ ஆகியவை மற்ற இரண்டு நாடுகளாகும்.
- இத்தாலிய தீபகற்பம் மற்றும் ஐரோப்பாவிற்கு வெளியே அமைந்துள்ள ஒரே சுதந்திர நாடும், ஒரு குறுநாடாக இல்லாத ஒரே நாடும் இதுவே ஆகும்.

## CAPF சட்டம் குறித்து உச்ச நீதிமன்றம்




- மத்திய ஆயுதக் காவல் படைகளின் (CAPF) 'குரூப் ஏ' (Group A) பிரிவைச் சேர்ந்த 3,000-க்கும் மேற்பட்ட அதிகாரிகள், 'மத்திய ஆயுதக் காவல் படை (பொது நிர்வாகம்) சட்டம், 2026'-ஐ எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர்.
- முந்தைய நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு கொண்டு வரப்பட்ட இச்சட்டம் அரசியலமைப்புக்கு முரணானது என்றும், அரசியலமைப்பின் 14, 16 மற்றும் 21-வது சரத்துகளை மீறுவதாகவும் மனுதாரர்கள் வாதிட்டுள்ளனர்.
- இச்சட்டம், CAPF பிரிவு அதிகாரிகள் பதவி உயர்வு மூலம் தலைமைப் பதவிகளை

அடைவதைக் கடினமாக்கும்.

- CAPF தலைமையிடங்களில் இந்தியக் காவல் பணி (IPS) அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைத்து, CAPF அதிகாரிகள் உயர்பதவிகளை அடைவதை எளிதாக்க வேண்டும் என்று 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு நேர்மாறான நடவடிக்கையைச் செயல்படுத்தும் நோக்கிலேயே இந்தச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.
- அனைத்து CAPF-களிலும், 'இன்ஸ்பெக்டர் ஜெனரல்' (IG) நிலையிலான மொத்தப் பதவிகளில் 50 சதவீதமும், 'கூடுதல் இயக்குநர் ஜெனரல்' (ADG) நிலையிலான பதவிகளில் குறைந்தது 67 சதவீதமும், 'சிறப்பு இயக்குநர் ஜெனரல்' மற்றும் 'இயக்குநர் ஜெனரல்' நிலையிலான அனைத்துப் பதவிகளும் பணி மாறுதல் (deputation) அடிப்படையில் IPS அதிகாரிகளைக் கொண்டு நிரப்பப்பட வேண்டும் என்று இச்சட்டம் கூறுகிறது.
- இதுவரை, இத்தகைய நியமனங்கள் நிர்வாக உத்தரவுகளின் அடிப்படையிலேயே மேற் கொள்ளப்பட்டு வந்தன.
- 'துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல்' (DIG) பதவிகளில் 50 சதவீதத்தை 'குரூப் ஏ' CAPF அதிகாரிகளுக்கு ஒதுக்கும் நடைமுறைக்கும் இச்சட்டத்தில் இடமளிக்கப்படவில்லை.
- இதனால், அப்பதவிகளில் அதிக எண்ணிக்கையிலான IPS அதிகாரிகள் பணி மாறுதலில் நியமிக்கப்படுவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.
- 'சஞ்சய் பிரகாஷ் எதிர் இந்திய அரசு வழக்கு' வழக்கில் 2025 ஆம் ஆண்டு மே 23 அன்று உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பைச் செயல்படுத்த உத்தரவிடுமாறு மனுதாரர்கள் கோரியுள்ளனர்.
- மேலும், அனைத்து CAPF-களிலும் உள்ள 'உயர் நிர்வாக நிலை' (HAG) பதவிகளை, பணி மாறுதல் மூலம் மட்டுமே நிரப்பாமல், அந்தந்தப் படைகளின் தகுதியுள்ள நிர்வாகப் பிரிவு அதிகாரிகளைக் கொண்டு நிரப்ப வேண்டும் என்றும், இதர நிவாரணங்களையும் அவர்கள் கோரியுள்ளனர்.
- CAPF-களின் 'குரூப் ஏ' நிர்வாகப் பிரிவு அதிகாரிகள் அனைத்து வகையிலும் 'ஒழுங்கமைக்கப்பட்ட குரூப் ஏ சேவைகள்' (Organized Group A Services) பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று 2025 ஆம் ஆண்டு மே 23 அன்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.
- அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் CAPF-களில் IG நிலை வரை IPS அதிகாரிகளின் பணி மாறுதல் நியமனங்களைக் படிப்படியாகக் குறைப்பதுடன், ஆறு மாதங்களுக்குள் பணி மற்றும் சேவை விதிகள் குறித்து காலக்கெடுவுடன் கூடிய மறுஆய்வு மேற்கொள்ளுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. உள்துறை அமைச்சகம் (MHA) அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்தது; ஆனால், 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 28 அன்று நீதிமன்றம் மறுஆய்வு மனுவைத் தள்ளுபடி செய்ததன் மூலம், அந்தத் தீர்ப்பு இறுதியானது.
- மத்திய ஆயுதக் காவல் படை (CAPF) மூன்று குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது: எல்லைப் பாதுகாப்புப் படைகள் (அஸ்ஸாம் ரைபிள்ஸ், எல்லைப் பாதுகாப்புப் படை, இந்தோ-திபெத்திய எல்லைக் காவல் படை மற்றும் சஷஸ்திர சீமா பல்), உள்நாட்டுப் பாதுகாப்புப் படைகள் (மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை மற்றும் மத்திய ரிசர்வ் காவல் படை) மற்றும் சிறப்பு அதிரடிப் படை (தேசிய பாதுகாப்புப் படை)..
- சட்டமன்ற நடவடிக்கையின் மூலம் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ரத்து செய்யும் விளைவை இச்சட்டம் கொண்டுள்ளது என்று அந்த மனுவில் வாதிடப்பட்டது.
- அந்த நடவடிக்கை அதிகாரப் பகிர்வுக் கோட்பாட்டிற்கு முரணானதாகும்.

## மூன்றாம் தரப்புக் காப்பீடு குறித்த உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு

- புதிய வாகனங்களுக்கான கட்டாய மூன்றாம் தரப்பு மோட்டார் வாகனக் காப்பீட்டு கால அளவை உச்ச நீதிமன்றம் ஓராண்டுக்கு நீட்டித்துள்ளது.
- இதன் மூலம், புதிய கார்களுக்கு இனி நான்கு ஆண்டுகளுக்கும், இருசக்கர வாகனங்களுக்கு ஆறு ஆண்டுகளுக்கும் காப்பீட்டுப் பாதுகாப்பு கிடைக்கும்.
- சட்டரீதியான கட்டாயம் இருந்தபோதிலும், அதிர்ச்சியளிக்கும் எண்ணிக்கையிலான வாகனங்கள் மூன்றாம் தரப்பு காப்பீடு இல்லாமலேயே இந்தியச் சாலைகளில் இயக்கப் படுவதை நீதிமன்றம் சுட்டிக் காட்டியது.
- இதனால் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பத்தினரும் இழப்பீடு பெறுவதற்குப் பல்வேறு இடங்களுக்கு போக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.
- செல்லுபடியாகும் காப்பீடு இல்லாத வாகனங்களுக்கு எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் வழங்குவதை மறுக்கும் வகையிலான ஒரு நடைமுறையை நீதிமன்றம் முன்மொழிந்தது.
- மேலும், போக்குவரத்து விதிமீறல்களைக் கண்டறிய நெடுஞ்சாலைகள் மற்றும் சாலைகளில் பொருத்தப்பட்டுள்ள 'தானியங்கி வாகன எண் பலகை கண்டறியும் ஒளிப்படக்கருவிகளை' (ANPR), 'இந்தியக் காப்பீட்டுத் தகவல் பணியகம்' (IIB) பராமரிக்கும் காப்பீட்டுத் தரவுகள் மற்றும் 'வாகன்' (VAHAN) இணையதளத்தில் உள்ள வாகனப் பதிவுத் தரவுகளுடன் இணைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.
- 'எஸ். ராஜசேகரன் எதிர் இந்திய அரசு' வழக்கில் 2018-இல் வழங்கப்பட்ட தீர்ப்பில், புதிய வாகனங்களை வாங்குபவர்கள், அவற்றை வாங்கும்போதோ அல்லது பதிவு செய்யும் போதோ கார்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கும், இருசக்கர வாகனங்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கும் மூன்றாம் தரப்பு காப்பீட்டைப் பெற வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தது.




## சேர்ந்து வாழும் உறவுகள் குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- குடும்ப வன்முறைக் குற்றத்தை சேர்ந்து வாழும் உறவுகளுக்கும் உச்ச நீதிமன்றம் விரிவுபடுத்தியுள்ளது.
- "திருமணத்தின் தன்மையிலான உறவுகள்" எனத் தகுதிபெறும், பரஸ்பர சம்மதத்துடன் வயதுவந்தோர் இணைந்து வாழும் உறவுகளுக்கும் குடும்ப வன்முறை எனும் குற்றவியல் சட்டம் பொருந்தும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

- 1860 ஆம் ஆண்டின் இந்திய தண்டனைச் சட்டத்தின் 498A பிரிவின் கீழ், சேர்ந்து வாழும் உறவில் உள்ள ஒரு ஆண் மீது வழக்குத் தொடர முடியுமா என்ற கேள்வியை விசாரிக்கும் போது இந்தத் தீர்ப்பு வந்துள்ளது.
- இந்திய தண்டனைச் சட்டத்தின் 498A பிரிவு (குடும்ப வன்முறை), தற்போது பாரதிய நியாய சம்ஹிதையின் 85 மற்றும் 86 பிரிவுகளால் மாற்றப்பட்டுள்ளதோடு இது திருமணமான உறவுகளுக்கு மட்டும் வரையறுக்கப்படக்கூடாது.
- நவீன, நகர்ப்புற வாழ்க்கையில் சேர்ந்து வாழும் உறவுகள் ஒரு யதார்த்தமாக இருந்தன.
- இன்றைய காலகட்டத்தில் ஒரு பெண்ணின் திருமண நிலைக்கும், குடும்பச் சூழலில் வன்முறையைத் தடுப்பதே 498A பிரிவின் நோக்கம் என்பதால், அதற்கும் நேரடித் தொடர்பு இல்லை என்று நீதிமன்றம் கூறியுள்ளது.
- திருமணம் போன்ற தன்மையுடைய மற்றும் திருமணம் செய்துகொள்வதற்கான அவசியமான நோக்கத்தைக் காட்டும் உறவுகளே "திருமணத்திற்கு மிகவும் நெருக்கமானவை" என்று நீதிமன்றம் வாதிட்டது.





## சுற்றுச்சூழல் செய்திகள்

### சூப்பர் எல் நினோ மற்றும் நேர்மறை IOD

- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மற்றும் அக்டோபர் மாதங்களுக்கு இடையில் உலக வானிலை அமைப்பு (WMO) ஒரு வலுவான சூப்பர் எல் நினோவுடன் நேர்மறை இந்தியப் பெருங்கடல் இருமுனையம் (Indian Ocean Dipole - IOD) இணையும் என எதிர்பார்க்கிறது.
- எல் நினோ என்பது மத்திய மற்றும் கிழக்கு பூமத்திய ரேகை பசிபிக் பெருங்கடலில் கடல் மேற்பரப்பு மற்றும் அதற்குக் கீழ் உள்ள நீரின் அசாதாரண வெப்பமயமாதல் ஆகும் என்பதோடு இது இயல்பான வர்த்தகக் காற்றை பலவீனப்படுத்துகிறது அல்லது திருப்புகிறது.
- இது இந்தியாவில் பருவமழையைக் குறைப்பதற்கும், உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பதற்கும், வெப்ப அலைகள், வறட்சிகள், காட்டுத்தீ மற்றும் கடல் வெப்ப அலைகள் ஆகியவற்றிற்கும் வழிவகுக்கும்.

- 2026 ஆம் ஆண்டுக்கான எல் நினோவை, 2026 ஆம் ஆண்டு ஜூன் 11 அன்று தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் (NOAA) அறிவித்ததோடு இது வேகமாக வலுவடைந்து வருகிறது.
- கடல் மேற்பரப்பு வெப்பநிலை 2.9°C-ஐ தாண்டும் என கணிக்கப்பட்டுள்ளதுடன் இது வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட மிகவும் வலிமையான நிகழ்வுகளில் ஒன்றாக அமைய வாய்ப்புள்ளது.
- நேர்மறை IOD என்பது மேற்கு இந்தியப் பெருங்கடலில் வழக்கத்தை விட வெப்பமான நீரையும், கிழக்கு இந்தியப் பெருங்கடலில் குளிர்ந்த நீரையும் குறிக்கிறது. இது இந்தியாவின் மழைப்பொழிவை ஆதரிப்பதோடு, எல் நினோவின் தாக்கத்தை ஓரளவு ஈடு செய்யும்.
- இவற்றின் ஒருங்கிணைந்த தாக்கம் உலகின் பல்வேறு பகுதிகளில் அதிக வெப்பம், வறட்சி, வெள்ளம் மற்றும் காட்டுத்தீ போன்ற அபாயங்களை அதிகரிக்கக் கூடும்.





# மாநிலச் செய்திகள்

## ஹொய்சாலர் காலத்து நடுகல் கண்டுபிடிப்பு

- கர்நாடகாவின் நீரகுண்டாவில் கன்னட கல்வெட்டுடன் கூடிய பல நூற்றாண்டுகள் பழமையான ஹொய்சாலர் ஆட்சியாளர் விஷ்ணுவர்த்தனனின் மரணம் குறித்த தகவல்களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ள வீரகல்லு (நடுகல்) ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- பங்காபுராவில் விஷ்ணு வர்த்தனன் இறந்த சிறிது நேரத்திலேயே போப்பா என்ற போர்வீரன் இறந்ததாகவும், அவரது நினைவாக அவரது மனைவி மரவ்வே என்பவரால் இக்கல்வெட்டு உருவாக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இக்கல்வெட்டின் காலம் துன்மதி ஆண்டு, புஷ்ய மாதத்தின் ஏகாதசி, அதாவது 1064

எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இது 1141 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் தேதியைக் குறிக்கிறது.

- விஷ்ணுவர்த்தனன் பங்காபுராவில் இறந்ததாக நம்பப்படுகிறது, ஆனால் அவரது மரணம் நிகழ்ந்த ஆண்டு 1149 முதல் 1152 வரை இருந்திருக்கலாம் என வரலாற்றாசிரியர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.
- கர்நாடக மாநிலம் ஹாசன் மாவட்டத்தில் உள்ள நீரகுண்டா கிராமத்தில் உள்ள லட்சுமி நாராயண சுவாமி கோயிலில் இந்த வீரகல்லு கண்டெடுக்கப்பட்டுள்ளது.





## அசாமின் மிசிங் பழங்குடியினர்

- சர்வதேச உலகப் பழங்குடியினர் தினத்தில் (ஆகஸ்ட் 9), அசாமின் இரண்டாவது பெரிய சமவெளிப் பழங்குடியினரான 'மிசிங்' பழங்குடியினர், வெள்ளப் பெருக்கை சமாளிக்க அவர்கள் கையாளும் பாரம்பரிய முறைகளுக்காக முன்னிலைப்படுத்தப்பட்டனர்.
- மிசிங் மக்கள் முக்கியமாக பிரம்மபுத்திரா மற்றும் அதன் துணை நதிகளின் கரையோரப் பகுதிகளில், குறிப்பாக தேமாஜி, லக்கிம்பூர், மஜூலி, ஜோர்ஹட் மற்றும் சோனித்பூர் ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்றனர்.
- அவர்கள் பாரம்பரியமாக மூங்கில் தூண்களின் மீது கட்டப்பட்ட 'சாங் கர்' (Chang Ghar) வீடுகளைப் பயன்படுத்துகின்றனர்; இது வசிக்கும் இடத்தை வெள்ள நீரிலிருந்து பாதுகாப்பாக மேலே வைத்திருக்கிறது.
- மூங்கில் மற்றும் கூரைப்புல் போன்ற உள்ளூரில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி நெல் சாகுபடி, கால்நடை வளர்ப்பு, மீன்பிடித்தல் மற்றும் கைத்தறி நெசவு ஆகியவை இவர்களின் பாரம்பரிய வாழ்வாதாரங்களில் அடங்கும்.
- இந்த சமூகம் அவர்களின் பாரம்பரிய விதைப்புத் திருவிழாவான 'அலி-ஆயே-லிகாங்' (Ali-Aye-Ligang) என்பதைக் கொண்டாடுகிறது. மேலும் இவர்கள் சூரியன் மற்றும் சந்திரனுடன் தொடர்புடைய 'டோனி-போலோயிசம்' (Donyi-Poloism) என்ற வழிபாட்டு

முறையைப் பின்பற்றுகின்றனர்.

- பருவநிலை விவசாயம், வெள்ளத்திற்கு ஏற்ற வீடுகள் அமைத்தல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளில் உள்ளூர் சூழலியல் அறிவைப் பயன்படுத்துதல் ஆகியவை மிசிங் மக்களின் பாரம்பரிய நடைமுறைகளாகும்.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### 2025 ஆம் ஆண்டுக்கான சந்த் கபீர் கைத்தறி விருதுகள்




- புதுடெல்லியில் உள்ள ராஷ்டிரபதி பவன் கலாச்சார மையத்தில், 2025 ஆம் ஆண்டுக்கான சந்த் கபீர் கைத்தறி விருதுகள் மற்றும் தேசிய கைத்தறி விருதுகளை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வழங்கினார்.
- மொத்தம் 22 விருதுகள் வழங்கப்பட்டன - அதில் 3 சந்த் கபீர் கைத்தறி விருதுகள் மற்றும் 19 தேசிய கைத்தறி விருதுகள் அடங்கும்.

- சந்த் கபீர் விருதுகள் ராம் மெஹர் (ஒடிசா), ருனிமா செட்டியா சௌத்ரி (அசாம்) மற்றும் ஷா முகமது அன்சாரி (உத்தரப் பிரதேசம்) ஆகியோருக்கு வழங்கப்பட்டன.
- தேசிய கைத்தறி விருதுகளில் காஞ்சிபுரம் பட்டு (தமிழ்நாடு), இகாட் (தெலங்கானா) மற்றும் கனி சால்வைகள் (ஜம்மு மற்றும் காஷ்மீர்) உள்ளிட்ட பாரம்பரிய ஜவுளிகள் அங்கீகரிக்கப்பட்டன.
- இந்தியாவின் நெசவு மரபுகளைப் போற்றும் வகையில் நான்கு நினைவு தபால் தலைகளையும் குடியரசுத் தலைவர் வெளியிட்டார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★